Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, COURT, SATTUR.

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No.CC.114/22 |
| Deposition of witness for Prosecution<br>Defence<br>Court | PW.2 |
| Name: | தங்கபாண்டியன் |
| Father's/Husband Name: | |
| Village: | |
| Taluk: | |
| Caste: | |
| Calling: | |
| Religion: | |
| Age: | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969(Central Act 44 of 1969) on the day of 24.11.2022 | |

**முதல் விசாரணை** : நேரம் :

நான் சுந்தரகுடும்பன் பட்டியில் வசித்து வருகிறேன். பயர் ஆபிஸில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பாக்கியலெட்சுமி எனது பக்கத்து வீட்டுக்காரர். கடந்த 21.3.2021ம் தேதி காலை 8.00 மணியளவில் நானும், எனது மனைவி தங்கவேலம்மாளும் வீட்டிற்கு அருகில் புற்களை புடுங்கி கொண்டிருந்தபோது பாக்கியலெட்சுமிக்கும், மந்திரமூர்த்தி, சண்முகராணிக்கும் சண்டை நடைபெற்றது, சத்தம் கேட்டு ஓடி பார்த்தோம். நாங்கள் பார்த்த போது பாக்கியலெட்சுமி வலது கையில் வெட்டு விழுந்து இரத்த காயம் ஏற்பட்ட நிலையில் இருந்தார். மந்திரமூர்த்தி மனைவி சண்முகராணி அ.சா.1 பாக்கியலெட்சுமியை கேஸை வாபஸ் வாங்க சொல்லி தேவிடியா என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள். மந்திரமூர்த்தி அரிவாளால் வெட்டியதால் அ.சா.1 பாக்கியலெட்சுமிக்கு காயம் ஏற்பட்டிருந்தது. பின்னர் பாக்கியலெட்சுமியை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு செல்லுமாறு கூறினோம். அவர் புகார் அளிக்க

போவதாக கூறிவிட்டு சென்றார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். எதிரிகள் எனது பக்கத்து வீடு என்பதால் அவர்களை எனக்கு நன்றாக அடையாளம் தெரியும். எதிரி மந்திரமூர்த்தி நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார் (சாட்சி எதிரி மந்திரமூர்த்தியை குறிப்பிட்டு அடையாளம் காட்டுகிறார்) (எதிரி சண்முகராணி இன்று நீதிமன்றத்தில் ஆஜரில்லை, அவரது தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது, அவரது அடையாளம் குறித்து ஆட்சேபணை எதுவும் இல்லை என்று எதிரி தரப்பு வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது).

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது வீட்டிற்கு கிழக்கு பக்கம் ஒரு வாசல் மேற்குபக்கம் ஒரு வாசல் உள்ளது. எங்கள் வீட்டிற்கு கிழக்கு பக்கம் மட்டுமதான் வாசல் உள்ளது என்றாலும் மேற்குபக்கம் வாசல் கிடையாது என்றாலும் சரியல்ல. நான் வீட்டின் கிழக்கு பக்கம் உள்ள புற்களை புடுங்கி கொண்டிருந்த போது சத்தம் கேட்டுதான் சம்பவ இடம் சென்றேன். நான்போய் பார்த்த போது 1வது எதிரி மந்திரமூர்த்தி அரிவாளுடன் இருந்தார், அ.சா.1 பாக்கியலெட்சுமி காயத்துடன் இருந்தார். யார் வெட்டினார்கள் என்று நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான், நான் சத்தம் கேட்டுதான் ஓடி வந்தேன். சம்பவ இடத்தில் சுமார் 10 ,15 நபர்கள் இருந்தார்கள். மேற்படி நபர்களை விசாரித்தால் சம்பவம் பற்றி தெரியும் என்றால் சரிதான். மந்திரமூர்த்திக்கும் அ.சா.1 பாக்கியலெட்சுமிக்கம், இடம் தகராறு நீண்ட காலமாக நடந்து வருகிறது. நான் சொன்ன நாள் மற்றும் நேரத்தில் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரிகள் அசிங்கமாக பேசவில்லை என்றால் சரியல்ல. நான் அ.சா.1 பாக்கியலெட்சுமிக்குஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும இல்லை என்றால் சரியல்ல.